RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2513

OPEN ACCESS

# சங்க இலக்கியத்தில் முல்லைத்திணை கற்புத்திணையே

நா. ஹேமமாலதி [அ, *]

[அ] தமிழ்த்துறை, சாரதா கங்காதரன் கல்லூரி, புதுச்சேரி-605004, இந்தியா

# Mullaithinai chastity in Sangam literature

N. Hemamalathi [a, *]

[a] Department of Tamil, Saradha Gangadharan College, Puducherry-605004, Tamil Nadu, India

* Corresponding Author:
langhema@sgcpdy.com

Received: 20-11-2024
Revised: 11-01-2025
Accepted: 18-01-2025
Published: 24-01-2025

Check for updates

## ABSTRACT

The basis for the five departments is contained in the primary department. Mullaithina songs are sung in association with the chastity of the heroine. In the cover page, there is a place where the leader's praises are mentioned, his valor and gift, and 'husband of a barren wife' is added. It can also be seen that 'imaginary' has been emphasized to the woman when she realizes that through marriage, women are denied economic equality and sexual freedom. It can be seen that the opinions of feminist commentators and the songs of Mullaith Thani reinforce this opinion. We seek to find such a record in Tamil literature, which had the ambitious aim of emphasizing chastity at a time when caste civilization was changing from caste civilization to landed civilization. A strong doctrine of chastity is enforced in Mullaith Thani. In a possessive culture, the woman also becomes a conquered possession. That is, there is no one-to-one control in ethnic group civilization. and the formation of the family system due to the emergence of individual property in the possessive culture, and this is why so many definitions and epithets have been given about chastity. This review seeks to explain that. This research is also subjected to the search to emphasize that the attempt to strengthen the chastity with the selected person during the period of the emergence of separate property from this social system can be seen in Sangha songs.

**Keywords:** Chastity, Mullaithinai, Agapadalgal, Sangham Literature, Chastity, Family

## முன்னுரை

ஐந்து திணைகளில் முல்லைத்திணை முக்கியத்துவம் வாய்ந்தது. திணைகளுக்கான நில அமைப்பைக் காணும்போது முல்லைத்திணையையே முதன்மைப்படுத்திப் பேசுகிறார் தொல்காப்பியர். ஐந்து திணைகளுக்கான அடிப்படையே முல்லைத் திணையில் தான் அடங்கியிருக்கிறது. ஏனெனில், முல்லைத்திணை பாடல்கள் தலைவியின் கற்போடு தொடர்பு படுத்திப் பாடப்பட்டிருக்கின்றன. (நற்றிணை. 330)

சங்கப் பாடல்களில் 'நன்றி சான்று கற்பு', (நற்றினை 142 அகநானூறு 274 முல்லை களி மலைபடுகடாம் 215.) 'விளங்கு நகர் அடங்கிய கற்பு', ( நற்றிணை 330) 'மறம் கடிந்த கற்பு', ( குறுந்தொகை 338) 'பொறையோடு மலிந்த கற்பு', (புறநானூறு 166) 'வடமீன் புரையுங் கற்பு', (புறநானூறு 361) 'செய்தீர் கற்பு,' ( புறநானூறு 122) 'மாசில் கற்பு', (புறநானூறு 3) 'நாணொடு மிகுந்த கற்பு', (அகநானூறு 114) 'இகலது கற்பு', (அகநானூறு 9) 'கடவுட் கற்பு', (அகநானூறு 114) 'மறுவில் கற்பு', (புறநானூறு 314) எனப் பரவலாக கற்புப் பற்றிய சொல்லாடல்கள் விரவி இருக்கின்றன. புறத்திணையில் தலைவனின் புகழைக் கூறுமிடத்தும் அவனது வீரம், கொடை இவற்றோடு 'கற்புடை மனைவியின்

கணவன்' என்பதும் சேர்க்கப்பட்டிருந்தது. பதிற்றுப்பத்தில் ஒன்பது இடங்களிலும் புறநானூற்றில் ஐந்து இடங்களிலும் இவ்வாறு பயன்படுத்தப்பட்டு இருப்பதை அ. செல்வராசு தம் நூலில் தொகுத்தளித்திருக்கிறார். இனக்குழுக்களுக்கு இடையே திருமண பந்தங்கள் கூட ஒரு வகையில் பெண் மீது நடத்தப்படும் பண்டமாற்றே என்கிற லெவிஸ்ட்ராஸின் கூற்றுப்படி,

'கற்பெனப் படுவது காரணமொடு

புணரக்கொளற்குரி மரபின் கொடுப்பக்

கொள்வதுவே" (தொல்காப்பியம், கற்பியல் -1)

என்ற தொல்காப்பிய நூற்பா பொருந்தி வருவதனை காணலாம். கணவன் என்ற எஜமானுக்குப் பெண்ணை அடிமையாக்க நினைக்கும் பூர்சுவாக்களின் தந்திரமே திருமணம் என்பார் சிமோன் தெ ஃபூவா என்னும் பிரெஞ்சுப் பெண்ணிய திறனாய்வாளர். பெண்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் காரணம் திருமணம் என்று கருதும் அவர், திருமணத்தால் பெண்ணுக்கு பொருளாதார அளவில் சம உரிமை மறுக்கப்படுகிறது என்றும் அவளது பாலுறவு சுதந்திரம் தடுக்கப்படுகிறது என்றும் கூறுவார்.

பலரும் சொல்வதைப் போல் திருமணத்திற்குப் பிறகு பெண் ஒருத்தி இல்லத்தரசி என்றெல்லாம் முடிச்சூட்டப்படுவதில்லை. அவளுக்கு என்று கிடைக்கக்கூடிய சுதந்திரம் சமையலறை அல்லது வீட்டை அலங்கரிப்பது. பிறகு திரும்பத் திரும்ப வழக்கமான வீட்டுப் பணிகளைச் செய்வது அவளுடைய இருப்பு நிலை கணவனால் அவ்வப்போது உறுதிப்படுத்தப்பட வேண்டும். கணவனுக்கு அடங்கியவளாகவும், துணையாகவும் இருப்பதை வைத்தே அவளுக்கான மரியாதை வழங்கப்படுகிறது. முல்லைத் திணைப் பாடல்கள் இக்கருத்தை வலுப்படுத்தும் விதமாய் அமைந்துள்ளன.

பண்டைத் தமிழ் இலக்கியத்தில் திருமணமான பெண்கள் கணவனுடன் சேர்ந்து இல்லறம் நடத்தியதை விடவும் போருக்காகவும், பொருளுக்காகவும் புறப்பட்டுச் சென்ற கணவனுக்காகக் காத்திருந்த காலங்களே மிகுதியாக இருந்திருக்கும். சங்க இலக்கியத்தில் தலைவிகளுக்குத் திருமணம் ஆகும் முன்பே மெய்யுறு புணர்ச்சி நிகழ்ந்து விடுகிறது. அது பகற்குறி, இரவுக்குறி என்று வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் தலைவிக்குத் தலைவனோடு உறவுக் கொள்ள நேர்கிறது. அப்படி சந்திப்பவர்கள் தனிமையிலே வரட்டுத் தனமான காதல் வசனங்களைப் பேசிக் கொண்டிருப்பதில்லை. இக்களவு காலத்தில் ஏற்படும் மெய்ப்பாடுகள் குறித்து தொல்காப்பியர் கூறும் இடம் பாலியல் நோக்கில் தற்காலத்து ஊடகங்களில் தடை செய்யப்பட்ட ஒன்றாகும்.

இவ்வாறு கூடிப் பழகிய எல்லா தலைவர்களும் தலைவியை ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. இதனை, முற்கூறிய வரைவுக்கடாதல் என்னும் துறையில் அமைந்த பாடல்களைக் கொண்டு அறியலாம். களவிற்குப் பின் ஏமாற்றிய தலைவர்களும் உண்டு.

"யாரு மில்லை தானே கள்வன்

தானது பொய்ப்பின் யாவெவன்

செய்கோ

திணைத் தாள் அன்ன சிறு

பசுங்கால

ஒழுகு நீர் ஆரல் பார்க்கும்

குறுகும் உண்டு தான் மணந்த

ஞான்றே" (தொல்காப்பியம், கற்பியல்.:1)

தலைவன் கள ஒழுக்கத்திற்குப் பின் 'உன்னை மணந்து கொள்வேன் என்று வாக்களித்ததை மறுத்துப் பேசினான். அவ்வாறு அவன் கூறியதை ஒரு நாரை ஒன்று பார்த்தது. அதுதான் சாட்சி என்கிறாள் ஒரு குறுந்தொகை தலைவி.

அறநெறி இல்லாத ஒருவன் அழகிய நெற்றியை உடைய இளையவள் ஒருத்தியின் நலத்தைக் கவர்ந்து உண்டான். பின் அவளை அறியேன் என்று சூளுரைத்தான். அதன் மெய்மையை உணர்ந்த அவையத்தார் அவனைத் தளிர்கள் பொருந்திய மரத்தில் கட்டி, சுண்ணாம்பு நீற்றினைத் தலையில் பெய்ததாக அகநானூற்றில் மதுரைத் தமிழ்க் கூத்தன் கடுவன் மள்ளனார் பாடிய பாடல் ஒன்று குறிப்பிடுகிறது. (குறுந்தொகை: 25)

இனக்குழு நாகரிகத்திலிருந்து நில வுடமை நாகரிகமாக மாறிக்கொண்டிருந்த இக்காலகட்டத்தில் கற்பை வலியுறுத்துவதை லட்சிய நோக்கமாகக் கொண்ட தமிழ் இலக்கியங்களில் இத்தகையப் பதிவை அரிதாகத்தான் காண முடிகிறது. ஆனால் நடைமுறையில் இத்தகைய இலட்சிய நோக்கு கடைபிடிக்கப்பட்டிருக்குமா என்பது ஆய்விற்குரியது. கட்டுப்பாடற்ற பாலியல் உறவுகள் களவு காலத்தில் நிகழ்ந்ததை அடியொற்றி நம்மால் ஒரு முடிவுக்கு வர முடியும்.

போக காலத்தை விடவும் போர்க் காரணமாகவும், பொருள் தேடுதல் காரணமாகவும் பிரிந்து இருக்கும் தலைவனை எண்ணி காத்திருக்கும் தலைவியரின் காமவேட்கை உயிரைவிட பெரிதாய் இருந்திருக்கிறது. கன்றிற்கும் ஆகாமல், காலத்திலும் புகாமல் நிலத்தில் விழும் பாலைப் போன்று தலைவியின் அழகு நலன்கள் எல்லாம் தலைவனுக்கு உதவாமல் மாமை எனும் காதல் நோயால் உண்ணப்பட்ட காலம் அது. தலைவிக்கு எழும் இத்தகைய தீராத காம வேட்கையை ‘தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்’ என்று பெருந்திணை என்ற இழிவான பகுதிக்குள் அடக்க முயன்றனர் அக்காலச் சான்றோர்.

இச்சூழலில் தான் கற்பு என்னும் வலிமையான கோட்பாடு வற்புறுத்தப்படுகிறது. முற்றிய கட்டித் தயிரைப் பிசைந்த காந்தல் மலரைப் போன்ற மெல்லிய விரலைத் துடைத்துக் கொண்ட ஆடையைத் துவைக்காமல் உடுத்திக் கொண்டு, குவளை மலரைப் போன்ற மையுண்ட கண்களில் தாளிப்பினது புகை மணக்க தானே துழாவிச் சமைத்த இனிய புளிப்பை உடைய குழம்பை, தன் தலைவன் இனிதென உண்ணுவதைக் கண்டு மகிழ்வதில் தான் பெண்ணுக்குரிய கற்பு அடங்கி இருப்பதாகச் சித்தரிக்கப்பட்டது. (அகநானூறு 256)

பெரிய கொம்புகளை உடைய கன்றுகளை ஈன்ற எருமையானது, உழவனால் கட்டப்பட்ட தன் கன்றின் பக்கத்தில் இருந்து அகன்று செல்லாமல் அருகில் உள்ள பசும் புல்லை மேய்வதைப் போல பெண்ணும் தனது குழந்தைகளைப் பாதுகாப்பதும், தலைவன் சேர்த்து வைத்த செல்வங்களை வீட்டிலிருந்து முறைப்படி காப்பாற்றுவதுமே அவளது கடமைகளாகக் காட்டப்பட்டன. அதனை மனைக்கடம் என்பர். (குறுந்தொகை: 167)

வீட்டில் தங்கியிருக்கும் குருவிகள். முற்றத்தில் உலரும் தானியங்களைத் தின்று தன் குஞ்சுகளுடன் இருப்பதைப் போல பெண்ணும் வீட்டில் அடங்கியிருக்க வேண்டும். (குறுந்தொகை: 181)

வீட்டில் வளர்க்கப்படுகின்ற பெட்டைக்கோழிகள் வேலிக்கு அயலில் உள்ள காட்டுப் பூனையின் கூட்டம் தம்மைத் தாக்காமல் இருப்பதற்கு அஞ்சி மாலைக் காலத்தில் பாதுகாப்பாக வீட்டினுள் அடங்கி இருத்தலைப் போன்று பெண்ணும் தன் தலைவன் வரும்வரை பிற ஆடவர் கண்ணில் படாமல் அடங்கி வாழவேண்டும். தலைவனைப் பிரிந்து இருக்கின்ற பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொள்ளக்கூடாது. தவவலிமை உடைய பெண்கள் அக்காலத்தில் தலைவன் வீட்டில் இல்லாத போது தங்கள் தோற்றத்தைக் குரங்குப் போல மாற்றிக் கொள்வார்களாம்.

ஆண்களுக்குத்தான் செய்கின்ற தொழில்தான் முக்கியம். ஆனால் ஆண்களை நினைத்து மனையில் உறைகின்ற மனைவிக்குக் கணவன்தான் முக்கியம். ஏனென்றால், தலைவியின் உடல்கூட தலைவனுக்குச் சொந்தமானதுதான்.

உடைமை நாகரிகத்தில் பெண்ணும் ஆணால் வெற்றி கொள்ளப்பட்ட உடைமைப் பொருளாகிறாள். யாழை மீட்ட நினைக்கிறவன் எவ்வாறு அதனிடம் அனுமதி கேட்பதில்லையோ அதுபோல பெண்ணின் அனுமதியின்றி அவளை தன்னால் இயன்ற அளவு கட்டுப்படுத்துகிறான்.

இனக்குழு நாகரிகத்தில் ஒருத்திக்கு ஒருவன் என்ற கட்டுப்பாடு கிடையாது. உடைமை நாகரிகத்தில் தனிச்சொத்தின் தோற்றத்தினால் குடும்பம் என்ற அமைப்பு உருவாகிறது. வேலைப் பிரிவினைகள் ஆண் பெண்ணுக்குத் தனித்தனியாக வரையறுக்கப்படுகிறது. பெண்ணின் பணிக்களம் வீடாக அமைகிறது. அதனால் பெண்ணை மனையாள், மனையோள், மனை முதல் என்று அழைத்தனர். (குறுந்தொகை: 46)

அவள் கற்பொழுக்கத்தோடு இருந்தால்தான் ஆண்மகன் தனக்கான வாரிசு யார் என்பதில் உறுதியாக இருக்க முடியும். அவள் கற்பொழுக்கத்தோடு இருந்தால்தான் குடும்பம் என்ற ஒரு நாட்டின் அடிப்படை அலகு சிதையாமல் இருக்கும். இதனால் தான் கற்பு பற்றி இத்தனை வரையறைகள், கற்பிற்கு இத்தனை அடைமொழிகள்.

பெண்ணையும் மீறி ஆண் அவளுக்கு விதித்த கட்டுப்பாடுகளை மீற முடியாமல் அதற்கு ஒப்புக்கொண்டு வாழ வைத்ததில் ஆணின் அதிகாரம் வெற்றி அடைந்ததை முல்லைத் திணைப் பாடல்களில் காண்கிறோம். '

'குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்' என்ற நூலில் காட்டுமிராண்டி நிலையிலிருந்து பரிபூரண மனித நிலை அடையாத காலத்தில் இருந்த தனிச்சொத்து தோற்றக்காலம்வரை உள்ள பாலியல் உறவு மாற்றங்களை குறித்து விரிவாக விவாதித்துள்ளார்.

முதலாவது, பெற்றோர்களுக்கும், குழந்தைகளுக்கும் இடையில் பாலுறவு விலக்கப்பட்டது. அதாவது வெவ்வேறு தலைமுறைகளுக்கு இடையில் உள்ள பாலுறவு விலக்கப்பட்டது.

இரண்டாவது, ஒரு தாய்க்குப் பிறந்த ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையில் பாலுறவு தடை செய்யப்பட்டது. இக்காலத்தில் பூனலுவா என்ற வழக்கம் இருந்தது. அதாவது, கணவன் மனைவி இருவருக்கும் இரண்டாவது துணையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை அவர்கள் நெருங்கிய நண்பர்கள் அல்லது அந்தரங்கக் கூட்டாளிகளாய் (associe என்று ஏங்கெல்ஸ் அழைப்பார்) இருந்தனர். (அகநானூறு: 51:13) ஏறத்தாழ இந்தச் சமூக அமைப்பிலிருந்து விடுபட்டு, தனிச்சொத்து தோற்றக் காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நபருடன் காதலுறவை வலுப்படுத்தும் முயற்சியைச் சங்கப் பாடல்களில் காண்கிறோம். அங்கே இவ்வியல்பிலிருந்து இழிந்தவர்களை மனிதர்களிலும் இழிந்தவர்கள். 'கூடா ஒழுக்கம்' உடையவர்கள் என்று பட்டம் சூட்டுவது அவர்களுடைய கருத்தை வலுப்படுத்த சாதகமாய் அமைந்தது.

கணவன் இருக்கும் போது அல்லது காவல் இருக்கும்போது மனைவி கற்பாய் இருப்பது பெரிதல்ல. கணவன் பிரிந்து இருக்கும்போது மனைவி கற்பொழுக்கம் பூண்டிருக்க வேண்டும். அதனால் தான் முல்லைத்திணை கற்பித்திணையாகிறது.

## முடிவுரை

சங்க இலக்கியத்திலேயே ஆணாதிக்கப் போக்கினைக் காணமுடிகிறது. அச்சம், மடம், நாணம் முதலியவை பெண்களுக்கு உரியவையாகவும் வீரம், புகழ் முதலியவை ஆண்களுக்கு உரியவையாகவும் இவ்விலக்கியங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளன. பெண் கற்பை வலியுறுத்தி ஆணாதிக்கச் சிந்தனையை வலுப்படுத்தும் விதமாக சங்க பாடல்கள் பாடப்பட்டுள்ளன. இதில், புறத்தில் ஆண் மண்ணை வெற்றி கொள்வதைப் பற்றியும், அகத்தில் ஆண் பெண்ணை வெற்றிகொள்வதைப் பற்றியும் உள்ள பாடல்கள் ஆண் வலிமைக் கோட்பாட்டை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளன.

## References

குமாரசாமி, சி.என். (2001) பெண்ணிய நோக்கில் பாரதி, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை,

கோவிந்தசாமிபிள்ளை, இராம. (1962) தொல்காப்பியம், வெற்றிவேல் அச்சகம், தஞ்சாவூர்.

சதீஷ், அ. (2008) சங்க இலக்கிய உரைகள், அடையாளம், புத்தாநத்தம், திருச்சி.

சாமிநாதையர், உ.வே. (1931) பத்துப்பாட்டு மூலம், கேசரி அச்சுக்கூடம், சென்னை.

செல்வராசு, அ. (2003) ஆண் ஆளுமையில் பெண் கற்பு, எழில், திருச்சி.

பஞ்சாங்கம், க. (1994) பெண்ணெனும் படைப்பு, செல்வன் பதிப்பகம், புதுச்சேரி.

பெரியார், (2006) பெண் ஏன் அடிமையானாள்?, பாரதி புத்தகாலயம், சென்னை.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2025. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License